Kanton Bern
Canton de Berne

hallo–bern.ch
salut–berne.ch

# Kanton Bern

குறுகிய விவரணம்
அரசியல் அமைப்பு
மதம்
ஓய்வு நேரம்

# குறுகிய விவரணம்

"பேர்ண் மாநிலம் சுவிஸிலுள்ள 26 மாநிலங்களில் (உறுப்பினர் மாநிலங்கள்) ஒன்றாகும். குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இரண்டாவது பெரிய மாநிலமாகும். பேர்ண் மாநிலத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில் இது டொச் மற்றும் பிரான்ஸ் மொழி பேசும் நிலப்பரப்பை இணைத்து பாலமாக செயற்படுகிறது. "

## எண்ணிக்கைகளும் உண்மைகளும்

பேர்ண் மாநிலம் பத்து இலட்சம் குடியிருப்பாளர்களை கொண்டிருப்பதுடன் அதில் 16 வீதமானவர்கள் வெளிநாட்டவர்க்களாயுமுள்ளனர். ஏறத்தாள 6000 சதுர கி.மீ பரப்பளவில் 346 குடியிருப்பாளர் கிராமசபைகளும் (Gemeinden|Communes), பத்து நிர்வாக பிரிவுகளும் உள்ளன. இதன் தலைநகரம் பேர்ண். அரசமொழி டொச் மற்றும் பிரான்ஸ். இருமொழித்தன்மை ஒரு பெருமதிமிக்க சிறப்பம்சத்தை கொண்டுள்ளது.

## வரலாறு

பேர்ண் மாநிலத்திற்கு 800 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தேசிய வரலாறு உள்ளது. பேர்ண் நகரம் 1191ல் ஏற்கனவே உருவாக்கப்பட்டது. பின்னர் நகரம் வேகமாக விரிவடைந்தது. 1798 இல், பழைய பேர்ண் பிரெஞ்சுப் புரட்சியின் படைகளின் படையெடுப்பால் அழிக்கப்பட்டது. 1831 முதல் ஜனநாயகம் உருவாகத் தொடங்கியது. புதிய அரசியலமைப்பின் மூலம் முதன்முறையாக ஒரு சீரான சட்டம் ஏற்படுத்தப்பட்டது. 1848 இல், பேர்ண் சுவிட்சர்லாந்தின் தலைநகராக உறுதிசெய்யப்பட்டது. ஜுரா மாநிலம் 1979 ஆம் ஆண்டில் பேர்ண் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்ட மூன்று மாநிலங்களிலிருந்து உருவாக்கப்பட்டது.

## சம்பிரதாயமும் பாரம்பரியமும்

மாநிலத்தின் வெவ்வேறு பிரதேசம் மற்றும் கிராமங்களில் வித்தியாசமான கலாச்சார மற்றும் பண்டிகைகளையும் கொண்டிருக்கும். அடிப்படையாக "ஒரே மாதிரியான " பேர்ண் சம்பிரதாயம் உருவாகவில்லை.
Emmental ல் Seeland ஐ விட வேறு விதமான கொண்டாட்டங்களும், மற்றும் பேர்ண் மேற்பகுதியில் பேர்ண்-ஜூரா அல்லது மத்திய பிரதேசத்தை விட வேறு பழக்க வழக்கங்களை பேணுகிறார்கள். ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் அதன் சொந்த பண்புகள் உள்ளன. பேர்ண் மாநிலம் தனது வாழும் மரபுகளின் பட்டியலை வைத்திருக்கிறது. இதற்காக ஒரு சிறப்பு தேடுபொறி உள்ளது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/canton-of-bern/brief-portrait

# அரசியல் அமைப்பு

"சுவிஸ் அரசியல் நிலை 3 தலைப்புகளாக இருக்கின்றன: மத்தியஅரசு, மாநிலம் (உறுப்பினர் மாநிலங்கள்) மற்றும் கிராமசபைகள். சுவிஸ்பிரசைகள் தமது அரசியல் நிலைகளை வாக்களிப்தன் மூலம் தீர்மானிப்பர். "

## சுவிஸ் மத்திய அரசு

சுவிஸ் இணைந்தநாடானது 1848 ஆண்டிலிருந்துள்ளது. தலைநகரம் பேர்ண். சுவிஸ் இனரீதியாக, மொழி மற்றும் சமயரீதியாக ஒன்றையே கொண்டிருக்கவில்லை. வேவ்வேறு கலாச்சாரங்கள் சுயாதீனமாக பிணைந்திருப்பதன் காரணமாக "விருப்பமான தேசியம்" (Willensnation|"Nation par volonté") ஆக கூறப்படுகிறது. சுவிஸ் சர்வதேச அரசியல் ரீதியாக நடுநிலையைப்பேணி வருகிறது.

## கூட்டாட்சித்தத்துதுவம்

சுவிஸ் மாநிலங்கள் மற்றும் கிராமசபைகள் என்பன பெரும்பாலும் சுயாதீனமானவை, அரசியலிலும் சட்டத்திலும் உள்ள திறன்கள் கூட்டாட்சி அரசு, மாநிலங்கள், மற்றும்கிராமசபைகளிற்கிடையே பிரிக்கப்படுகின்றன. (Subsidiaritätsprinzip |principe de subsidiarité). இங்கு கூட்டாட்சி பற்றி பேசப்படுகிறது (Föderalismus |Fédéralisme).
26 மாநிலங்கள் மற்றும் 2000ற்கு மேற்பட்ட கிராமசபைகள் என்பன முற்றாக அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவையாக உள்ளன. பேர்ண் மாநிலம் சொந்தமான அரசியல் அடிப்படையையும் அரசையும், ஒரு பாராளுமன்றத்தையும் ஒரு நீதிமன்றத்தையும் கொண்டிருக்கின்றது. பெரும்பாலான அரசின் நடைமுறைகளுக்கு மாநிலம் அல்லது கிராமசபையே பொறுப்பாயுள்ளன. இதனால் உதாரணமாக பாடசாலை நடைமுறை மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசமான முறையில் வரையறுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் சட்டங்கள் நாடு முழுவதற்கும் செல்லுபடியாகும்போது, மாநிலத்தால் உருவாக்கப்படும் சட்டம் அம்மாநில பிரதேசத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு செயற்பாடுகளும் மாநிலம், கிராமசபை மற்றும் மத்திய அரசையும் தொடர்புபடுத்துவதாகவே இருக்கும்.

## அதிகாரப்பிரிப்பு

அதிகாரம் குவிவதை தடுக்குமுகமாக அரசானது சுவிஸ் மற்றும் மாநிலங்களில் மூன்று சுயாதீனமான தெரிவுகளை பிரித்துவைத்துள்ளது : சட்டத்தை உருவாக்குபவர் தெரிவு, சட்டத்தை நிர்வகிப்பவர் தெரிவு, மற்றும் நீதித்துறைத்தெரிவு. பேர்ண் மாநிலத்தில் பின்வரும் நிர்வாகங்கள் இந்த செயற்பாட்டை நடைமுறைப்படுத்துகின்றன:

- சட்டமன்றம்: மேல்சபை (Grosser Rat) (160 அங்கத்தவர், 4 வருடங்களுக்கொரு முறை மக்களால் தெரிவு செய்யப்படுவர்.(பிரான்ஸ் மொழி பேசும் பேர்ண் ஜூரா வின் நிர்வாகப்பிரதேசத்திலிருந்து 12 உறுதி செய்யப்பட்ட ஆசனங்கள் மேல்சபையில் உள்ளன.
- நிறைவேற்றல்சபை: ஆளுனர் சபை (7 அங்கத்தவர், 4 வருடங்களுக்கொருமுறை மக்களால் தெரிவு செய்யப்படுவர்). பேர்ண் ஜூரா விலிருந்து ஒரு உறுதி செய்யப்பட்ட ஆசனம்.
- நீதிச்சபை: மாநில மற்றும் பிரதேச ரீதியாக உள்ள வேறுவேறான நீதிமன்றங்கள்.

அத்துடன் கிராமசபைகளிலும் சட்டசபைகள் (கிராமசபைக்கூட்டங்கள் அல்லது பாராளுமன்றம், (Gemeindeversammlung, Parlament), மற்றும் ஒரு நிர்வாகி (நகரபிதா அல்லது கிராமசபைபிரதிநிதி, Stadtrat, Gemeinderat) என்பன காணப்படுகின்றன. மத்திய நிர்வாக ரீதியில் சட்டமன்றம் 2 சபைகளை கொண்டுள்ளது: தேசிய மற்றம் நிர்வாகப்பிரதிநிதிகள் (National- und Ständerat). தேசிய அரசு (7 அங்கத்தவர்கள்) என்பது மத்திய அமைச்சர்கள் (Bundesrat). அத்துடன் தேசியரீதியிலும் வேறுவேறான நீதிமன்றங்கள் உள்ளன. உச்சநீதிமன்றமானது மிகவும் உயர்ந்தநிலையில் இருப்பதுடன் உதாரணமாக மாநில நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை மீளாய்வுக்கு தொடர்ந்து ஆராய அனுப்பக்கூடியதாக இருக்கிறது.

## ஜனநாயக உரிமைகள்

சுவிஸ் பிரஜைகள் தெரிவு - மற்றும் வாக்களிப்புக்கு தகுதி பெற்றவர்களாயுள்ளனர். அவர்கள் கிராமசபை, மாநில மற்றும் தேசிய மட்டத்தில் அரசியல் தீர்மானங்களை தெரிவு செய்யவும் அத்துடன் தாமாகவே தெரிவு செய்வதற்காக முன்வைக்கவும் முடியும். அத்துடன் பிரசைகள் கிராம, மாநில மற்றம் தேசிய ரீதியான அரசியல் நடைமுறைகளை தெரிவு செய்யமுடியும்.(நேரடியான உரிமை). சர்வசபை வாக்கெடுப்பு மூலம் மக்களால் தமது சொந்த விருப்புகளை வாக்கெடுப்புக்கு உள்ளாக்கலாம். பேர்ண் மாநிலத்தில் வாழும் வெளிநாட்டினருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை.
எவ்வாறாயினும், அரசியல் ரீதியாக இயங்குவதற்கும் தமது தேவைகளை நிர்வாகங்களிற்கு சுட்டிக்காட்டவும் பல்வேறு வழிகள் உள்ளன:

- ஒரு கட்சியில், ஒரு நிறுவனத்தில் அல்லது ஒரு சங்கத்தில் உறுப்பினராதல்,
- குழுக்கள் மற்றும் பிற அமைப்புகளில் பங்கேற்பு
- மனுக்கள்
- வாசகர்களுக்கான கடிதங்கள் அல்லது இணைய மன்றங்கள்

சில நகராட்சிகளில் புலம்பெயர்ந்தோர் பங்கேற்பதற்கான அமைப்புகள் உள்ளன. உதாரணமாக பெர்ன் நகரில் புலம்பெயர்ந்தோருக்கான மன்றம்.

## அடிப்படை உரிமை

அதிகூடிய அடிப்படைச்சட்டக் கொள்கைகள் சுவிஸின் கூட்டாட்சி அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளது. கூட்டாட்சி அரசியியலமைப்பின் ஒரு முக்கியமானதாக ஐரோப்பிய மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டில் (EMRK | CEDH) எடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் அமைகின்றன. இவை மனிதனின் இருப்புகளைப் (உதாரணத்திற்கு வாழ்க்கைக்கான உரிமை, அவசர நிலையில் உதவிக்கான உரிமை) பாதுகாப்பதுடன் மற்றும் தனிப்பட்டவர்களுக்கெதிரான அரச வன்முறை அல்லது பெரும்பான்மையோருக்கு எதிரான குழுக்களின் வன்முறைகள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கிறது.
அனைத்து மக்களும் தோற்றம், பாலினம், தோல் நிறம், வயது, மொழி, மதம், பாலியல் நோக்குநிலை மற்றும் உடல், மன அல்லது உளவியல் குறைபாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடுகளிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். இது அவர்களின் குடியிருப்பு நிலை மற்றும் தேசியத்தைப் பொருட்படுத்தாமல் இது பொருந்தும்.
எவருக்கும் அவர்களின் பிறப்பிடம், இனம், மதம், பாலினம் அல்லது பாலியல் போக்கிற்குப் பாரபட்சம் காட்டக்கூடாது என்பதை உத்தரவாதம் செய்கிறது . பேர்ண் மாநிலத்தில் இனப்பாகுபாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச ஆதரவு மற்றும் ஆலோசனை வழங்கப்படுகிறது.
பாகுபாடுகளால் பாதிக்கப்பட்ட எவரும் உள்வாங்கல் ஒருங்கிணைப்பு இடங்களில் அல்லது சிறப்பு அலுவலகங்களை (gggfonமற்றும் RBS) தொடர்பு கொள்ளலாம்.
சுவிஸில் சமயம், கருத்து வெளியிடுதல், மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் உள்ளன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/canton-of-bern/political-system

# மதம்

சுவிஸ் ஒரு பாரம்பரிய கிறிஸ்தவ நாடு. ஆயினும் இன்று பல வேறு மதங்களைச் சேர்ந்த அதிக மக்கள் சுவிஸில் வாழுகிறார்கள். ஒரு பெரிய பகுதி சுவிஸ் மக்கள் எந்த மத சமூகத்திலும் இல்லை. மதச் சுதந்திரம் உறுதிப்படுத்தப் பட்டிருப்பதுடன் அரச பாடசாலைகள் மதச் சார்பற்றவை.

## மதமும் அரசும்

சுவிஸ் பாரம்பரியமான கிறிஸ்தவ நாடாகும். மாநிலங்களே மதம் மற்றும் மாநிலத்திற்கான தொடர்புகளை தீர்மானிக்கும். பெரும்பாலான டொச் மாநிலங்கள், பேர்ண் மாநிலம் உட்பட,- கிறிஸ்தவ சமயகூட்டமைப்பை பகிரங்க சட்டபூர்வ நிறுவனங்களாக (தேவாலயங்கள், Landeskirchen) அங்கீகரத்துள்ளன. இதன் கருத்து மாநிலம் இவற்றிற்கு குறிப்பிட்ட உரிமைகளைக் கொடுத்துள்ளது. இதன்மூலம் உதாரணமாக தமது அங்கத்தவரிடமிருந்துவரியைப் பெற்றுக்கொள்ளலாம். பேர்ண் மாநிலத்தில் றோமன் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மற்றும் கிறிஸ்தவ கத்தோலிக்க தேவாலயங்கள் உள்ளன.
பேர்ண் மற்றும் பீல் யூத சமூகங்கள் 1997 இல் பொது சட்ட அங்கீகாரம் பெற்றன.

## அறோ மாநிலத்தில் மத சமூகங்கள்

பேர்ண் மாநிலத்தில் பொதுவான சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட மதத்தைத் (தேவாலயங்கள் ) தவிர மேலும் பல மதச் சமூகங்கள் உள்ளன. பெரும்பாலான பேர்ண் மக்கள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள். கடந்த பல வருடங்களாக முஸ்லிம் மக்களின் தொகை அதிகரித்து வருகிறது. மொத்த குடியிருப்பாளர்களில் 1/4 வீதமான மக்கள் எவ்வித மத நம்பிக்கை அற்றவர்களாக வாழ்கிறார்கள்.

## மதச்சுதந்திரம்

சுவிசின் அரசியலமைப்பு மதச்சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிக்கிறது. ஒவ்வொருவரும் தமது சொந்த மதத்தை பேணவும் அதைப்பரப்பவும் உரிமையுள்ளது. எவரும் மதத்தில் இணைவதற்கும், மதசெயற்பாடுகளில் பங்கொடுக்கவும் நெருக்கடி கொடுக்கமுடியாது. மக்கள் ஒன்றாகக்கூடி தமது சமய வழிபாடுகளை கொண்டாட முடியும். எவரும் தமது மதம் அல்லது நம்பிக்கையை அவமதிக்கக்கூடாது.

## மதமும் பாடசாலையும்.

கட்டாயப்பாடசாலை மதச்சார்பற்றது. அதன் அர்த்தம் சமயப்பாடம் படிப்பிற்பதில்லை என்பதல்ல. சமயப்பாடத்தில் இரு வகையுண்டு. இவையாவன : மதப்பிரிவுள்ள தேவாலய சமயபாடம் மற்றும் பாடசாலைச் சமயப்பாடம் "நன்நெறி, மதங்கள் மற்றும் சமூகம் " இந்தப் பாடத்தில் அனைத்து மனிதர்களுடன் சம்பந்தப்பட்ட மதமும் நன்நெறியும் பற்றிய கேள்விகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. மதப்பிரிவுள்ள தேவாலயச் சமயபாடத்திற்குப் போவது தன்னிச்சையானது. வேறு மதங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்குப் பாடசாலை தவிர்ந்த நேரங்களில் மதச்சமூகங்கள் மூலம் தமது மதங்களைப் படிக்கலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/canton-of-bern/religion

# ஓய்வு நேரம்

"பேர்ண் மாநிலத்தில் ஓய்வு நேரத்தை களிப்பதற்கு பல கவர்ச்சியான வசதிகள் உள்ளன. இதில் முக்கியாமானவை கழகங்களாகும். அதேசமயம் இவை வெவ்வேறு மனிதர்களை அறிந்துகொள்ள சந்தர்ப்பங்களை வழங்குகின்றன. "

## கழகங்கள்

பேர்ண் மாநிலத்தில் அதிகமான குடியிருப்பாளர்கள் ஏதோ ஒரு கழகத்தில் (Verein | association) அங்கத்தவராயிருப்பார்கள்.பல வகைப்பட்ட ரசனைக்கேற்ப அதிக கழகங்கள் உள்ளன. சிறிய கிராமசபைகளில் கூட விளையாட்டு - கலாச்சாரம் மேலும் பல கழகங்கள் உள்ளன. அவை மனிதர் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள சிறந்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன.அதிகமான கழகங்கள் அனைத்து மக்களுக்காகவும் திறந்துள்ளன. கழகங்கள் பற்றிய தகவல்களை கிராமசபைகளின் இணையத்தளங்களில் தேடலாம்.

## சிறுவர்கள் மற்றும் இளையவர்களுக்கான வசதிகள்

பேர்ண் மாநிலத்திலுள்ள இளையவர்கள் தமது ஓய்வு நேரத்தைக் கழிக்கவும் தமது வயதையொத்தவர்களுடன் பழகிக் கொள்ளவும் எனப் பல விசேட வசதிகள் உள்ளன. அதிகமான கிராமசபைகளில் ஓய்வு நேரச் சலுகைகளுடன் கூடிய சந்திப்புக்கள் உள்ளன. இங்குள்ள இளையவர்களைப் பராமரித்து அவர்கள் எண்ணங்களைச் சேர்த்து செயற்திட்டமாக்குவார்கள் (Jugendarbeit). இச் சலுகை வழக்கமாக இலவசமானது. இளைஞர் அமைப்புகளில் ஒரே வயதினர் சேர்ந்து தடகள இயற்கை விளையாட்டுக்களில் பங்கெடுப்பார்கள். இதைக் கழகங்கள் கிராமசபைகள் அல்லது தேவாலயங்கள் நடத்தலாம். இந்த சலுகைகள் அனைத்து இளையோருக்கும் உரியது. வதியும் கிராமசபைகளில் மேலதிக விபரங்களை அறியலாம்.

## சுற்றுலாவும் கலாச்சாரமும்

பேர்ண் மாநிலம் பலவிதமான சுற்றுலாவசதிகளையும் பெருமளவு கலாச்சார வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கிறது.
கிறாமப்புறங்கள் சிறிய நகரங்கள், கோட்டைகள் மற்றும் வசதியான பண்ணை வீடுகளால் வகைப்படுத்தப்படுகிறது. அத்தடன் சுடுநீர்குளியல்கள். இதைவிட பலதுவிச்சக்கரவண்டி உலா. பெருமளவு அருங்காட்சியகங்கள் பல்வேறு தலைப்புகளில் கண்காட்சிகளை வழங்குகின்றன. சுவிசில் மிகவும் பிரபல்யமானவை Zentrum Paul Klee அல்லது பேர்ண் கலை அருங்காட்சியகம். மாநில சுற்றுலாஏற்பாட்டுநிறுவனம் "Made in Bern" சுற்றுலா வசதிகளையும் நிகழ்ச்சிகளையும் பற்றி தெரிவிக்கும். தற்போதைய கலாச்சார நிகழ்வுகளை உள்ளூர் பத்திரிகைகளிலும் அறிந்துகொள்ளலாம்.

## விரும்பிவேலைசெய்தல்

விரும்பிவேலைசெய்தல் (Freiwilligenarbeit) என்பது மனிதர்களுக்கும் சூழலுக்கும் இலவசமாக வழங்கும் சமூகரீதியான அர்ப்பணிப்பு. பெருமளவு வேலைகள் சுவிசில் பாரம்பரியமாக விரும்பி வேலை செய்யப்படுகின்றன. பெரும்பாலான வேலைகள் கழகங்களுக்குள் செய்யப்படுகின்றன. இதன்மூலம் கழகங்கள் கலாச்சாரம், விளையாட்டு, சமூக நலன்கள், கல்வி, மிருகங்கள்- மற்றும் சுற்றாடல்பாதுகாப்பு, சுகாதாரம் மறறும் பல வகைகளிலும் ஈடுபடுகின்றன. விரும்பி வேலை செய்பவர்கள் மற்றும் வேலைசெய்யும் சந்தர்ப்பங்கள் பற்றிய தகவல்களை உதாரணமாக விரும்பி வேலைசெய்யும் விசேடநிலையம் Benevol, Caritas பேர்ண் அல்லது சுவிஸ் செஞ்சிலுவைச்சங்கம் பேர்ண் இல் (SRK) பெற்றுக்கொள்ளலாம்.
தஞ்சம் மற்றும் அகதிகள் துறைகளில் தன்னார்வப் பணிகளுக்கு மாநில பிராந்திய பங்காளிகளே பொறுப்பு. இதன் முகவரிகள் கீழே இணைக்கப்பட்டுள்ளன. அகதி பிரச்சினைகளுக்கான தேவாலய தொடர்புநிலையங்கள் மேலும் தகவலை வழங்க முடியும்

## விளையாட்டு ஃ கலாச்சாரம்ஃகல்வி

பேர்ண் மாநிலத்தில் பல விளையாட்டு, கலாச்சார மற்றும் கல்வி நிகழ்வுகள் உள்ளன. இது பற்றிய தகவல்களை நீங்கள் வசிக்கும் நகராட்சியிடமோ அல்லது சுற்றுலா நிறுவனங்களிலோ பெறலாம்.
Kulturlegi கரிதாஸ் அடையாள அட்டை: உடன் - வருமானம் குறைந்தவர்களுக்கு கிடைக்கும் இந்த அடையாள அட்டையுடன் விளையாட்டு - கலாச்சார - கல்வி நிகழ்ச்சிகளில் குறைந்த செலவில் பங்குபற்றலாம். இந்த அடையாள அட்டைக்கு கரித்தாஸில் விண்ணப்பிக்கலாம். கரித்தாஸ் விண்ணப்பத்தைப் பரிசோதித்த பின்பு Kulturlegi பெறத் தகுதியுள்ளவரா என்பதை அறிவிக்கும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/canton-of-bern/leisure